# இதயப் புகழ் வாய்ந்தவள்

தபூ சங்கர்



உன் பிறந்தநாளை
என்னிடம் கொடு
இனி நான்
கொண்டாடிக் கொள்கிறேன்

# இதயப் புகழ் வாய்ந்தவள்

தபூ சங்கர்

நிறம்
பதிப்பகம்









ஆயிரம்பேர்
தேரிழுக்கும் திருவிழாவில்
அத்தனைபேரையும்
இழுக்கிறது
உன் வருகை

✧

நீ அழகாகப் பிறந்த
பெண் இல்லை
பெண்ணாகப் பிறந்த
அழகு

✧









அக்னி நட்சத்திரம்கூட
அருந்ததி நட்சத்திரமாகிவிடுகிறது
நீ அருகில் இருந்தால்

✧

கவிதை வரிகள்
கலைந்திருந்தால்
அது கவிதையல்ல

உன் கூந்தல் வரிகள்
கலைந்திருந்தால்
அது கவிதைதான்

✧









நீச்சல் குளத்தில்
தாமரைப்பூ மலர்ந்திருப்பதாகச்
சொன்னார்கள்
ஓடி வந்து பார்த்தால்
நீச்சல் குளத்தின் நடுவே நீ

✧

வளையல் கடையில்
நீ வளையல் வாங்கப் பார்த்தாய்
வளையல்கள் எல்லாம் சேர்ந்து
உன் கைகளை வாங்கப் பார்க்கின்றன

✧









நான் உன்னிடம்
காதலைச் சொல்லத் தவிக்கிறேன்
நீ என்னிடம்
காதலை மறைக்கத் தவிக்கிறாய்

✧

உன் இமைகள்
சிறகடிக்கும்போதெல்லாம்
பறக்கும்
விசித்திரப் பறவை
என் இதயம்

✧









நீரில்
நான் கல் எறிந்தால்
வளையம் தோன்றுகிறது
நீ கல் எறிந்தால்
இதயம் தோன்றுகிறது

✧

உன் கழுத்தில் தொங்கும்
டாலர்தான்
எனக்கு மில்லியன் டாலர்

✧









நீ நரகத்துக்குச் செல்லவேண்டும்
உன்னை விட்டால்
வேறு யாரால் முடியும்
அதைச் சொர்க்கமாக்க

✧

எத்தனையோ தியாகங்கள் செய்த
தலைவரின் பெயர் வைக்கப்பட்ட
உன் வீடிருக்கும் வீதியை
உன் பெயர் சொல்லித்தான் அழைக்கிறது
ஊர்

✧









உண்மையில்
மதிப்பு கூட்டப்பட்ட வரி
உன் உதட்டிலிருக்கும் வரிதான்

✧

ஒரு தட்டச்சு இயந்திரத்தைப்போல
ஓயாமல் அடித்துக்கொண்டிருக்கிறது
உன் பெயரை
என் இதயம்

✧










ஆள்காட்டி விரலும்
அழகுக்காட்டி விரலாகிவிடுகிறது
உன்னைக் காட்டும்போது

✧


உன்னைத்தவிர
வேறெந்த மடிக் கணினிக்கும்
இடமில்லை
என் மடியில்

✧









அசையா சொத்து
உன்
மேல் உதடு
அசையும் சொத்து
உன்
கீழ் உதடு

✧

யாராவது
பார்த்துவிடுவார்களோ என்று
என்னிடம் நீ
பேசத் தயங்குகிறாய்

விளக்கை அணைப்பதுபோல
இந்தப் பகலை
அணைக்கத் துடிக்கிறது இதயம்

✧









நான் உன்னைப் பார்த்தால்
உன் அண்ணன் மட்டும்தான்
என்னை முறைக்கிறான்
நீ என்னைப் பார்த்தால்
ஊரே என்னை முறைக்கிறது

✧

உலகப்புகழ் வாய்ந்தவர்களுக்கும்
மேலாக
இதயப்புகழ் வாய்ந்தவள் நீ

✧









உன்னைப் பார்க்கும்வரை
எங்கும் உன்னைத்
தேடிக்கொண்டிருந்தேன்

உன்னைப் பார்த்தபின்
எங்கும் உன்னைப்
பார்த்துக்கொண்டிருக்கிறேன்

✧

நீ என்னைப் பார்க்காதே
என் காதலைப் பார்

நான் வெறும்
அட்டைப்பெட்டி
எனக்குள் இருக்கும்
காதல்தான்
உனக்கான பரிசு

✧









உன்னிடம் பேசாமல்
உன்னையே சுற்றிவரும்
என்னைப் பற்றி
'யாரிவன்' என்கிற கேள்வி
ஒருநாள் உன் இதயத்தில் எழும்

இன்னொருநாள்
அதற்குப் பதிலும்
உனக்குக் கிடைக்கும்

அன்று நான்
உன் காதலனாக இருப்பேன்

✧

நான் நினைத்ததைவிட
அற்புதமானவளாய்
நீ எப்படி இருக்கிறாயோ
அப்படித்தான்
நீ நினைத்ததைவிட
அற்புதமாக இருக்கும்
என் காதல்

✧









உன்னைப் பார்த்த நொடியில்
என் அறிவில் ஒன்று
கூடிப்போனது
அந்த அறிவின் பெயர்
காதல்

✧

புத்தகங்களில்
எத்தனையோ காதல் கதைகளைப்
படித்திருக்கிறேன்

உன்னைப் பார்க்கையில்
நிஜத்தில் ஒரு கதை
தொடங்கிவிட்டதாகவே
தோன்றுகிறது எனக்கு

✧









உன் நண்பனாக மாறி
பிறகு உன் காதலனாக ஆவதற்கு
எனக்கு விருப்பமில்லை

உன் காதலன் ஆகும்வரை
உனக்கு நான்
யாரோ ஒருவனாகவே இருப்பேன்

✧

நான் பிறக்கும் முன்பே
என் இதயம் துடிக்கத்
தொடங்கிவிட்டதைப்போல்
உன்னைப் பார்க்கும்முன்பே
உன்னைக் காதலிக்கத்
தொடங்கிவிட்டேன்

✧









நதியில் நீர் வருவதைப்போல
தெருவில் நீ நடந்துவருகிறாய்

நீரில் மிதந்து போகும்
ஆகாயத் தாமரையைப்போல
நான் மிதந்து போகிறேன்

✧

உன் வீட்டு ரோஜாவைப் பறித்து
உன்னிடம் தருவது மாதிரிதான்
நீ தந்த காதலை
உன்னிடம் சொல்வது

✧









'எனக்குக் கோயில் கட்டு' என்று
கனவில் வந்து கடவுள் சொல்வதைப்போல
'என்னைக் காதலி' என்று
என் கனவில் வந்து நீதான் சொன்னாய்

அது மட்டுமா
நீ என்னைக் காதலிக்கவில்லை என்றால்
முத்தம் கக்கி செத்துப்போய்விடுவாய்
என்று வேறு மிரட்டினாய்

✧

தனியாக இருக்கும்
உன் பெயருக்கு
துணையாக இருக்கத் துடிக்கிறது
என் பெயர்

✧









தினமும் நான்
வெகுநேரம் விழித்திருந்து
உன்னை நினைத்துக்கொண்டிருந்துவிட்டு
காலதாமதமாகத் தூங்குவதால்
உன்னைக் கனவில் காண
குறைவான நேரமே கிடைக்கிறதென்று
என் விழிப்பின் மீது
கோபத்திலிருக்கிறது
என் உறக்கம்

✧

நீ எதுவுமே தராவிட்டாலும்
எல்லாம் தந்துவிடுகிறது
உன் பார்வை

✧









என் காதலைச் சொல்லிவிட்டேன்
பதிலை நீ
உடனே சொல்லத் தேவையில்லை
ஒரு ஜென்மம் கழித்து கூடச்
சொல்லலாம்

ஆனால் ஒன்று...
உன் பதிலுக்காகக் காத்திருக்கும்
ஒவ்வொரு நாளும்
எனக்கொரு ஜென்மம்தான் என்பதை
நினைவில் வைத்துக்கொள்

✧

என் காதல் மீது
உனக்கு அய்யம் இருந்தால்
என் பின்னந்தலையில் பலமாகத் தாக்கி
என்னை கோமாவில் ஆழ்த்து

நினைவிழந்த நிலையில்
உன் பெயரையே சொல்லிக்கொண்டிருந்தால்
என் காதில் உன் காதலைச் சொல்
எழுந்துகொள்வேன்

✧









உன்னை
நேரில் பார்க்காத நாளில்
நான் தூங்கியதில்லை

உன்னை
கனவில் பார்க்காத நாளில்
நான் விழிக்கப்போவதில்லை

✧

உன்னிடம் பேச வந்து
பார்த்துவிட்டுத் திரும்பிவிடுகிறேன்
என்றாலும்
பார்த்ததே
பேசியது மாதிரிதான் இருக்கிறது

✧









இறைவனிடம்
கையேந்துவதைப்போல
உன்னிடம்
கண் ஏந்தினேன்
நீ காதலை அருளினாய்

✧

நீ என்
காதலியாகிவிட்டாய்

'உனக்கென்ன வேண்டும் கேள்
தருகிறேன்' என்று
கடவுளைப் பார்த்துக்கூட கேட்பேன்
இனி நான்

✧










எழுதப் படிக்கத் தெரியாதவன்
நொடிப் பொழுதில்
கவிராயன் ஆனதைப்போல் இருக்கிறது
உன் காதலன் ஆனது

✧

நீ கையெழுத்துப் போட்டுவிட்டு
ஒரு புள்ளி வைத்தாய்
உன் கையெழுத்திற்கு
உன் பேனா தரும் முத்தமா அது

✧









யாரையாவது அடித்துவிட்டு
சிரித்துக்கொண்டே
மன்னிப்புக்
கேட்கவேண்டும்போல
இருக்கிறது
நீ என் காதலை
ஏற்றுக்கொண்டதிலிருந்து

✧

'என் கூடப் பிறந்தவர்கள்
யாருமில்லை' என்றாய்

உன் கூடத்தான்
இவ்வளவு அழகுகள்
பிறந்திருக்கிறதே

✧









நீ என்னைத் தொட்டுப் பேசத்
தொடங்கிவிட்டாய்

என் நண்பர்களிடம்
சொல்லிவிடவேண்டும்
இனி யாரும்
என்னைத் தொட்டுப் பேசாதீர்கள்
என்று

✧

உன் பிறந்தநாளை
என்னிடம் கொடு
இனி நான்
கொண்டாடிக் கொள்கிறேன்

✧










'நான் வளர்க்கும் கிளி
என் பெயரைச் சொல்லும்'
என்றாய்

நான் வளர்க்கும்
என் இதயம் கூடத்தான்
உன் பெயரைச் சொல்லும்

✧

வார இதழ் மாத இதழ் எல்லாம்
எப்போதாவது
சிறப்பிதழ் வெளியிடுகிறது

எப்போதும்
சிறப்பிதழ்களாக இருப்பது
உன் இதழ்கள் மட்டுமே

✧









'நான் சுவாதி நட்சத்திரத்தில்
பிறந்தவள்' என்றாய்

உன்னை
நிலவில் பிறந்தவள் என்றல்லவா
நினைத்திருந்தேன்
அதையும் தாண்டி
நட்சத்திரத்தில் பிறந்தவளா நீ

✧

எல்லா மின் விளக்குகளும்
மின்சாரத்தை எடுத்துக்கொண்டுதான்
வெளிச்சத்தை வீசுகின்றன

நீ மட்டும்தான்
வெளிச்சத்தோடு சேர்த்து
மின்சாரத்தையும் வீசுகிறாய்

✧









என் இதயத்தில்
நிறைந்திருக்கும் காதலை
அப்படியே அள்ளி
உனக்கு வழங்குகிறேன்

வழங்கி முடிப்பதற்குள்
இதயத்தை
நிரப்பிவிடுகிறது காதல்

✧

ஒரு குழந்தைக்குக்கூட
கொடுக்க மனம் வரவில்லை
உனக்கான முத்தத்தை

✧









சின்ன வயதில்
வானொலிப் பெட்டிக்குள்ளிருந்து
ஆட்கள் பேசுவதாக
நினைத்திருக்கிறேன்

இப்பொழுதோ
அலைபேசிக்குள்ளிருந்து
நீ பேசுவதாக
நினைத்துக்கொள்கிறேன்

✧

பாவம் நீ
இத்தனைக் கவிதைகளை
சுமந்திருக்கிறாயே
என்று இரக்கப்பட்டு
ஒரு கவிதையை
நான் இறக்கிவைத்தால்
உடனே நீ
இரண்டு கவிதைகளை
ஏற்றிவைத்துக்கொள்கிறாய்

✧









மரம் விட்டு மரம் அல்ல
வனம் விட்டு வனம் தாவுகிறது
என் மனம்
நீ என்னைக் 'குரங்கு' என்று
திட்டும்போது

✧

கைரேகை சோதிடம்
கற்றுக்கொண்டிருக்கிறேன்
உன் கையைப் பார்த்து
பலன் சொல்வதற்காக அல்ல

உன் கையைத்
தொட்டுப் பார்த்து
பலன் பெறுவதற்காக

✧









மாம்பிஞ்சுதான் வெம்பிப்போகும்
என்றில்லை
மாம்பழமும் வெம்பிப் போகிறது
வேண்டாம் என்று
நீ சொல்லும்போது

✧

ஓர் இரவு விளக்கைப்போல
விடிய விடிய கண்விழித்துப்
பார்த்துக்கொள்ள ஆசை
உன் உறக்கத்தை

✧









பின்னால் வந்து
என் கண்களைப் பொத்தினாய்
இதயத்தில் திறந்தது
மூன்றாவது கண்

✧

இன்று ஒருநாள் மட்டுமல்ல
என் வாழ்நாள் முழுவதும்
மணப்பெண்தான்
நீ எனக்கு

✧









என் உடலில் ஓடுவது
என் உயிர் போலத்
தெரியவில்லை

சற்றுமுன்
நீ அணைத்த அணைப்பில்
உடல் மாறியிருக்குமோ
உன் உயிரும்
என் உயிரும்

✧

‘வீடு கட்டவேண்டும்’ என்று
நீ சொல்வது
வியப்பாக இருக்கிறது

ஒரு செங்கல்லை
நீ நட்டு வைத்து
நீரூற்றினால்
செங்கல்
வீடாக வளர்ந்துவிடாதா என்ன

✧










நீ குளிக்கச் செல்லும்போதும்
குளித்து முடித்து
வந்தவளைப்போலத்தான்
இருக்கிறாய்

✧

அபிஷேகம்தான்
நீயே செய்து கொள்கிறாய்
உன்னை அலங்காரம் செய்யவாவது
என்னை விடு

✧









'என்னையா காதலித்தாய்' என
என்னை மிரட்டுகிறாய்
ஒரு மணி நேரத்துக்கு
ஒரு அவதாரம் எடுத்து

✧

உனக்காக
விட்டுக்கொடுக்கும்போது
விட்டுக்கொடுத்த இடத்தில் வந்து
உட்கார்ந்து கொள்கிறது
காதல்

✧









ஒரு தேவதையைப்போல
உள்ளே சென்று
ஒரு தெய்வத்தைப்போல
வெளியே வருகிறாய்
பூஜை அறையிலிருந்து

✧

இவ்வளவு
பரிசுத்தமாகவா இருப்பாய்...
கைகளைக் கழுவிவிட்டு
சாப்பிடுவதைப்போல்
கண்களைக் கழுவிவிட்டுத்தான்
உன்னைப் பார்க்கவேண்டும்போல

✧









நீ ஏன்
சமையல் அறைக்குள்
நுழைந்தாய்

போய் பூஜை அறைக்குள்
உட்கார்
நான் சமைத்து
படையல் வைக்கிறேன்

✧

ஓர் அழகு கலைந்து
இன்னொரு அழகு எழுவதைப்போல
நீ தூக்கம் கலைந்து
விழித்தெழுகிறாய்

✧









எல்லா இன்பங்களையும்
வைத்திருக்கும் உன்னை
'இல்லாள்' என்று
எப்படி அழைப்பது

✧

உப்பிட்டவரையே
உள்ளளவு நினைக்கவேண்டும்
என்றால்
வாழ்விட்ட உன்னை
உயிரளவு நினைத்தாலும்
போதாது

✧









தெய்வத்திடம் இருக்கும்
எல்லாம்தான்
உன்னிடம் இருக்கிறது

இருந்தாலும்
இன்னும் அப்படி
என்னதான் வேண்டுகிறாய்
தெய்வத்திடம்

✧

முழுதாக
இருபத்திநாலு மணி நேரமும்
உன்னோடு இருந்த நாளில்
உணர்ந்தேன்

ஒரு நாள்
எவ்வளவு அழகானது
என்பதை

✧









'புனிதப் பயணம் செல்லும்
தாய் தந்தையரோடு
நாமும் செல்லலாமா' என்றாய்
வேண்டாம்...
உன்னோடான இந்த வாழ்வின்
பயணமே
எனக்குப் புனிதப் பயணம்தான்

✧


உன் வீட்டு
ரோஜாவைப்
பறித்து
உன்னிடம்
தருவது மாதிரிதான்
நீ தந்த காதலை
உன்னிடம்
சொல்வது